# யூலை- 11- செவ்வாய்

### புனிதர் பெனடிக்ட்

**உம் முன்னிலையினின்று எனக்கு நீதி கிடைக்கட்டும்: உம் கண்கள் நேரியன காணட்டும். திபா. 17:2**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 32 : 23 – 33

அப்படி அவர்களை ஆற்றைக் கடக்கச் செய்தபோது, தமக்கிருந்த அனைத்தையும் அனுப்பி வைத்தார். யாக்கோபு மட்டும் இவ்வாறு தனித்திருக்க, ஓர் ஆடவர் பொழுது விடியுமட்டும் அவரோடு மற்போரிட்டார்.யாக்கோபை வெற்றி கொள்ள முடியாதென்று கண்ட அந்த ஆடவர் அவரது தொடைச்சந்தைத் தொட்டார். யாக்கோபு அவரோடு மற்போரிடுகையில் தொடைச் சந்து இடம் விலகியது.அப்பொழுது ஆடவர் "என்னைப் போகவிடு பொழுது புலரப்போகிறது" என, யாக்கோபு, "நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போகவிடேன்" என்று மறுமொழி சொன்னார்.ஆடவர், "உன் பெயர் என்ன?" என,அவர் "நான் யாக்கோபு" என்றார். அப்பொழுது அவர், "உன்பெயர் இனி யாக்கோபு எனப்படாது, "இஸ்ரயேல்" எனப்படும். ஏனெனில், நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்" என்றார்.யாக்கோபு அவரை நோக்கி "உம் பெயரைச் சொல்லும்" என்றார். அவர் "என் பெயரை நீ கேட்பதேன்?" என்று, அந்த இடத்திலேயே அவருக்கு ஆசி வழங்கினார்.அப்பொழுது யாக்கோபு, "நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன்" என்று சொல்லி, அந்த இடத்திற்குப் "பெனியேல்" என்று பெயரிட்டார்.அவர் பெனியேலுக்கு அப்பால் சென்றவுடன் கதிரவன் தோன்றினான். தொடை விலகியதால் அவரும் நொண்டி நொண்டி நடந்தார்.அதன் பொருட்டு, இஸ்ரயேலர் இந்நாள்வரை தொடைச் சந்துச் சதைநாரை உண்பதில்லை. ஏனென்றால், அந்த ஆடவர் யாக்கோபின் தொடைச் சந்துச் சதைநாரைத் தொட்டார்.

**பதில்பாடல்:** நானோ நேர்மையில் நிலைத்திருந்து உமது முகம் காண்பேன்

## நற்செய்தி : மத்தேயு 9 : 32 - 38

அக்காலத்தில் பேய் பிடித்துப் பேச்சிழந்த ஒருவரைச் சிலர் அவரிடம் கொண்டு வந்தனர்.பேயை அவர் ஓட்டியதும் பேச இயலாத அவர் பேசினார். மக்கள் கூட்டத்தினர் வியப்புற்று, "இஸ்ரயேலில் இப்படி ஒருபோதும் கண்டதில்லை" என்றனர்.ஆனால் பரிசேயர், "இவன் பேய்களின் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான்" என்றனர்.இயேசு நகர்கள், சிற்றூர்கள் எல்லாம் சுற்றிவந்தார். எங்கும் அவர்களுடைய தொழுகைக்கூடங்களில் கற்பித்தார் விண்ணரசைப்பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார் நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார்.திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவுகொண்டார் அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப்போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்.அப்பொழுது அவர் தம் சீடரை நோக்கி, "அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு.ஆகையால் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இயேசு மக்களைப் பார்த்து அவர்கள் மீது பரிவு கொண்டார் என்று நற்செய்தியாளர் சொல்கின்றார். இயேசு மக்கள் மேல் கொண்ட பரிவை நற்செயதியாளர் பல இடங்களில் வெளிப்படுத்துகின்றார்கள். திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது ‘பரிவுகொண்டார்’' என்பதனைக் காண்கின்றோம். இயேசு மக்கள் மீது கொண்ட பரிவுக்கு பலகாரணங்களை சொல்லலாம். மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் அனுபவிக்கக் கூடிய வலிகளைப் பார்த்து அவர் பரிவு கொண்டார். குருடர்களைப் பார்த்தது, நோயாளிகளைப் பார்த்து, தீய ஆவியினால் அலைக்கழிக்கப் படுகிறவர்களைப் பார்த்து, அவர் மிகவும் வருந்தினார். அவர்களது வலி போக்கும் அருமருந்தாக அவர் விளங்கினார். ஒருவருடைய இறப்பினால் அவருடைய இழப்பினால் மற்றவர்கள் அடைகின்ற துன்பங்கள் இயேசுவுக்கு துயரத்தைத் தந்தது அவர்களது கண்ணீரைத் துடைக்க அவர் திருவுளம் கொண்டார். உதாரணமாக நயீன் ஊர் கைம்பெண்ணின் மகன் இறந்ததையும் அந்த இழப்பினால் தாயார் பட்ட துயரத்தை இயேசு துடைக்கின்றார். இயேசு நமது வலிகளையும், துயரங்களையும் உணராதவர் அல்ல நமது துயரங்களையும் அவர் அறிதிருக்கின்றார் இயேசுவின் அன்பு வழியில் நாமும் நடக்கும் போது நமது துயரங்களையும் அவர் துடைப்பார் ஆமென்.